# ஏழைதாசன்

## உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்

✳ மார்ச் – 2006 ✳ இதழ் எண் : 133 ✳ விலை ரூ. 5/–

✦ தங்களது விமர்சனங்களை ஆசிரியரின் கைபேசி **94427 - 76868** என்ற இலக்கத்திற்கு அழைப்புகளாகவும் விடுக்கலாம். குறுஞ்செய்தியாகவும் அனுப்பலாம்.



வணங்குதலுக்கு எம்பெருமான் முருகவேல் !
வங்கிக்கு இப்பெருமான் முருகவேல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குபஞ்சர்,

# மாற்றுமுறை மருத்துவப்பயிற்சி



இடம் :
உங்கள் தாய் வீடாகிய
**அப்துல்லா மிஷன் மருத்துவமனை, காரைக்குடி.**

## 1 வருடம் டிப்ளமோ பயிற்சி, ரெகுலர் மற்றும் தொலை தொடர்புப் பயிற்சி

**ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் காண்டாக்ட் செமினார் வகுப்புகள் மற்றும் நேரடிப் பயிற்சி காரைக்குடியில் நடத்தப்படுகிறது.**

அக்குபஞ்சர், காந்த சிகிச்சை, கொரியன் சுஜோக் அக்குபஞ்சர், டி-அடிக்ஷன், எலக்ட்ரோ ஹோமியோபதி, மலர் மருத்துவம், ஹிப்னோ யோகா, ப்ரானிக் சிகிச்சை, ரெய்கி அக்குபஞ்சர் சிகிச்சை, யோகா, தியானம், ரெஃப்லக்சாலஜி, நாடி பரிசோதனை அக்கு டச் போன்ற பலதரப்பட்ட சிகிச்சை முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

## அக்குபஞ்சர் நிபுணர் பயிற்சி

டிப்ளமோ பயிற்சி பெற்றவர்கள் இலங்கை பல்கலைக்கழக மேற்படிப்பு பெறவும், பல்கலைக்கழக சான்று பெறவும் பயிற்சி அளிக்கப்படும்.

*ப்ராஸ்பெக்டஸ், கட்டணம் மற்றும் இதர அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

## அப்துல்லா மிஷன் மருத்துவமனை

பெரியார் சிலை அருகில், காரைக்குடி - 630 001.
CELL : 98424 - 23082 PH : 04565 - 233735, 238082

சென்னை, கோவை, மதுரை, தர்மபுரி, காரைக்கால், கும்பகோணம், செங்கல்பட்டு, காரைக்குடி ஆகிய இடங்களில் வெவ்வேறு தேதிகளில் செமினார் வகுப்புகள் நடைபெறுகிறது.

**போன் எண்கள் :**

சென்னை (வேளச்சேரி): 044-22435471 சென்னை (தாம்பரம்) : 044-22273786, 94441 - 80416, 92821 - 11618. கோவை : 0422 - 2570210 . மதுரை : 94434 - 08460, 0452 - 5536201. தர்மபுரி : 04342 - 570749, 94435 - 09839 காரைக்கால் : 94430 71284. கும்பகோணம் : 0435 - 2442259. 94437 - 43259 செங்கல்பட்டு : 044 - 27426163.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அகராதிக் கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா



சென்னையில் **தமிழினி குலேந்திரன்** 'அகராதிக் கவிதைகள்' நூலை அய்யா **பழ. நெடுமாறன்** வெளியிட்டு வைக்கிறார். **லேனா தமிழ்வாணன், இலங்கை மானாமக்கீன்,** திருமதி.குலேந்திரன், நடிகர் **பாண்டியராஜன், இரவி தமிழ்வாணன்** உடன் உள்ளனர்.

## 'என்னவள்' 'நெஞ்சத்தில் ஹைக்கூ' நூல் வெளியீட்டு விழா




மதுரையில் கவிஞர் இரா. இரவியின் இரண்டு நூல்களையும் வெளியிட்டு தலைமையுரை நிகழ்த்துகின்றார் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர். **பி. மருதமுத்து.** அருகில் கவிஞர் **இரா. இரவி,** முனைவர் **இரா. மோகன், சங்கர சீத்தாராமன்** உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வட்டம்

புலம் பெயர்ந்த தமிழர் வாழ்வியல் சார்ந்த உண்மை நிகழ்வுகளை தொலைநோக்குப் பார்வை யுடனும் இலக்கிய சிந்தனையுடனும் எடுத்துக்காட்டி உலாவரும் ஏழைதாசன் ஒரு காலப் பெட்டகமாகத் திகழ்கிறது. என்றால் அது மிகையன்று. அய்க்கூ சிறப்பிதழை மிக ஆர்வத்துடன் எதிர்பார்ப் பவர்களில் நானும் ஒருவன்.

– புதுச்சேரி, **ஆறு. தமிழ்நிதி வேந்தன்.**

உங்களுக்கு பெண்குழந்தை பிறந்திருப்பதையும், குழந்தைக்கு 'இனியா' என்று பெயர் சூட்டி இருப்பதையும் அறிந்து மகிழ்கிறேன். குழந்தைக்கு வாழ்த்துக்கள். ஏழைதாசன் அயல்நாடுகளில் வசிக்கிற தமிழர்களின் அன்பையும் வரவேற்பையும் ஆதரவையும் பெற்று வருவது சந்தோஷ சமாச்சாரம். வெற்றியூர் வேலு சதானந்தம் எழுதியுள்ள 'கற்பெனப்படுவது' கவிதை விஷேசமாகக் குறிப்பிடப்பட வேண்டியது ஆகும்.

– சென்னை, **வல்லிக்கண்ணன்.**

உலகத் தமிழர்களுக்கான ஒப்பற்ற படைப்புக்களமாய் இயங்கிவரும் இதழ், தமிழனென்ற உணர்ச்சியை மென்மேலும் அதிகரிப்பதற்கான உந்துசக்தியாய் திகழ்கிறது. இவ்விதழில் வெற்றியூர் வேலுசதானந்தம் கவிதை சிறப்பானது. வாழ்த்துக்கள்.

– திண்டுக்கல், **கவியோவியத் தமிழன்.**

ஏழைதாசனின் தமிழ்ப்பணி உலகினைப்புப் பணி ! வெளிநாடுகளுக்குச் சுற்றலாச் செல்லாமலே அன்புறவால் உறவு மையத்தை உண்டாக்கி உலகத் தரம் வாய்ந்த புத்தாக்கச் சிந்தனைச் செல்வங்களை தொடர்ந்து வெளியிடுவதில் தமிழகப் படைப்பாளர்கள் – பார்வை விரிகின்றது. பல இதழ்களில் பல குறைகளையே காண முடிகின்றது. பூப்பூவாய் அரும்பி உலக அளவில் உலா வரும் உலகத் தமிழ்க் கவிஞர்களின் தமிழ்ப்பாக்கள் தாயக் கவிஞர்களுக்கு வழிகாட்டுகின்றன. இந்த ஆச்சரிய அரிய தொண்டை மிகவும் உற்சாகமாக செய்கின்ற உங்களைப் பாராட்டுவதில் நான் பெருமையுறுகிறேன்.

– பழனி, **டாக்டர். இளங்கம்பன்.**

கவிச்சுவை மிகுந்து காணப்படுகிறது. சிங்கப்பூர் முருகடியானாரின் நல்ல தமிழ் வேண்டும் – நம் எல்லோரின் எதிர்ப்பார்ப்பும் தானே. மருத்துவர் அ. தேவராஜனார் மாற்று மதமானவராய் இருந்தாலும் (நல்ல எழுத்தை தான் சுவாசிக்க வேண்டும். மனித மதங்களை என்பது உறுதியானாலும்) எல்லோருக்கும் ஏற்ற வகையில் உதவியளித்திடும் பாங்கு சிறப்பில் ஒன்று. பெண்ணினத்திற்காக அந்தப் பெண்ணி னத்தை விட அதிக அளவில் துயர் கொண்ட நெஞ்சாக பலபல சேதிகளை சுட்டுவிடும் தீக்கனலாய் வெளியிட்டிருக்கிறார் வேலு சதானந்தம் தன் கற்பெனப்படுவது கவிதையில். பல்வேறு வெளிநாட்டு வாழ்தமிழ் பெருமக்களும் தொலைபேசி அழைப்புகள் வழி தங்களுடன் அளவளாவியது மிகுந்த மகிழ்வுதரும் ஒன்றுதான்.

– நாமக்கல், **சேர. சச்சிதானந்தன்.**

உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களின் இலக்கிய விழாக்கள் பற்றிய செய்தியை அறியும் அரிய இதழைப் படிக்கும் பொழுது அயல்நாட்டில் இருப்பவர்கள் அனைவரும் அருகில் இருப்பது போன்ற உணர்வுதான் ஏற்படுகிறது.

– ஒசூர், **கருமலைத் தமிழாழன்.**

ஏழைதாசன் என்ற திங்கள் சிற்றிதழ் கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது என்பார்களே அதைப்போல மிக அருமையாக, கருத்துச் செறிவோடும், பிற நாட்டு தமிழறிஞர்கள் கவிதைகள், கட்டுரைகளோடும் கவர்ந்திழுத்தப் பெருமை,தங்கள் எழுதுகோலை போற்றி பெருமை கொள்கிறேன். கடந்த 13 ஆண்டுகளாக ஆலாபனையின்றி தமிழ் முழங்கி வருவதை, தை 2006 இதழை மணமேல்குடி கிளை நூலகத்தில் கண்ணுற்றேன். இச்சிறு இதழில் இவ்வளவு பொருளடக்கமா? வியந்தே போனேன். சிங்கப்பூர் அமலதாசன் பாடலும், இலண்டன் சுடரொளி பரிசளிப்பு விழா பற்றியும் படித்தறியும் பாக்கியம் பெற்றேன். 'பொங்கிடும் பொங்கல்' உணர்ச்சிக் கவிஞர் உணர்வுப் பூர்வமாய் பொங்கிய பேரொளியை 'பாலுக்கு காவலாய், பூனையை வைத்து பரிவட்டம் கட்டுவதோ. அட! நாலுக்கும் இரண்டிற்கும் தட்டினை ஏந்தியோர் நாட்டினை ஆள்வதோ?' என்ற வைரவரிகள் என்னுள் இடியோசையை எழச் செய்தது.

– அண்டக்குளம், **கா. சுப்பையா.**

'நல்ல தமிழ் வேண்டும்' கவிதையில் இருந்த உள் விசயம், மொழி மீது மட்டுமல்ல, அதை பயன்படுத்தும் மனிதன் மீதான பார்வையும் இருந்தது. ஊடக காட்சிகளில் நிகழும் பாலியல் காட்சிகளில் தமிழையும் தமிழச்சியை வேறு மொழியே சிதைக்கிறது. பார்த்து ரசித்து மகிழ்கிறான். சிலநேரம் எதுவும் செய்யாமல் தூங்குகிறான் என்பதான பார்வை சூடாக இருக்கிறது. தமிழன் தான் உணர்ந்து விழிக்க வேண்டும். விழிக்க வைக்கிறது. முருகடியான் அவர்களின் கவிதை. பாராட்டுக்கள்.

– இலால்குடி, **ஆங்கரை பைரவி.**

தொடர்ந்து வரும் ஏழைதாசன் போற்றுதற்குரியது. நேரமின்மையாலும் பல்வேறு சிரமங்களாலும் படைப்புகளும் கடிதங்களும் அனுப்பவில்லை. இனிக்கும் அய்க்கூக்கள், இதயத்தை வருடும் கவிதைகள், நல்ல கட்டுரைகள் என்று அனைத்தும் முக்கனிச்சுவை. 'இரவிலும் உடைகளைந்து குளிக்க வெட்கம் குளத்தில் நிலா' என்ற அய்க்கூ மற்றும் மரணதண்டனை கைதிகளுக்கான மனிதநேய கட்டுரை என்று கடந்த இதழ்களில் என்னைத் தொட்டவை ஏராளம்.

– பகரைன், **வேலு சதானந்தம்.**

தங்களின் தமிழ்த்தொண்டு சிறக்க வாழ்த்துக்கள். அனைத்துலக தமிழ் மக்களின் எழுத்தும் கருத்தும் கவிதைகளும் வெளியிடும் ஒரே இதழ் ஏழைதாசன் மட்டுமே. – சேலம், கவிஞர். **ஆர்.சி. சவுண்டப்பன்.**

தோழர் மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் என் அன்பும், நட்பம், நீள் புகழோடு வாழ 'இனியா'வுக்கு வாழ்த்துக்கள்.

– இராசிபுரம், **நாணற் காடன்.**

எனது 80 ஆவது பிறந்த நாள் வாழ்த்துச் செய்திகளில் என்னைக் கவுரப்படுத்தி பாராட்டி எழுதியிருப்பதைக் கண்டு ஆனந்த பரவசம் அடைந்தேன். நன்றி. தங்களின் ஏழைதாசன் பத்திரிகை தமிழகத்திலேயே சிறந்த கவிதைப் பத்திரிகையாக உலா வர வாழ்த்துகிறேன்.

– பேரையூர். **டாக்டர் அ. தேவராஜன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒலைகள் (TAMIL PAGES)

நூல் மதிப்புரை



இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டன் மாநகரில் இருந்து கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக வெளிவருகிறது தமிழ் ஓலைகள் என்னும் வழிகாட்டி நூல். இதன் ஆசிரியர்கள் ஞானேந்திரன், சிறிகந்தராஜா ஆவார்கள்.

ஒரு காலத்தில் உலகையே தன் ஆட்சிப்பிடிக்குள் வைத்திருந்த இங்கிலாந்து வல்லாதிக்கத்தை இன்றைய ஈழத் தமிழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு துறை வாரியாக தகர்த்து வருகிறார்கள்.

இந்நூலைப் புரட்டுகிற போதெல்லாம் நெஞ்சில் இனம் புரியா மகிழ்ச்சி ஆக்கிரத்துக் கொள்கிறது. பல்வேறு பணிகளிலும் முத்திரைப் பதித்துக் கொண்டிருக்கும் தமிழர்களின் தனித்திறமையைப் பார்க்க, பார்க்க அத்தனை பாராட்டு உணர்வு பீறிட்டு வருகிறது.




கணக்காளர்கள், கலைஞர்கள், கணினியாளர்கள், கல்வியாளர்கள், இறக்குமதி - ஏற்றுமதியாளர்கள், படப் பிடிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத் தரணிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சமூகவியலாளர்கள், மருத்துவர்கள், மளிகை கடைக்காரர்கள், உணவு விடுதியாளர்கள் என தமிழர்கள் அகர வரிசைப்படி சிகரம் தொடுகிறார்கள்.

டென்மார்க், பிரான்சு, யேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய அய்ரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களின் சாதனைகளும் பளிச்சிடுகின்றன.

இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் அச்சமைப்பு நவீன தொழில் நுட்பமும் வண்ணங்களும் சேர்ந்து பிரமிப்பை ஏற்படுத்துகின்றது.

இவ்வளவு நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து சுமார் 768 பக்கம் வடிவமைத்து வெளிக்கொணர்வது சாதாரண வேலை அல்ல, சரித்திரம் படைக்கத் துடிக்கும் இரு இளைஞர்களின் ஒருமித்த சாதனையாகும்.

இங்கிலாந்திலோ, அய்ரோப்பியாவிலோ தமிழர் ஒருவருக்கு உதவி வேண்டுமெனில் தீர்க்கமாகச் சொல்லலாம் இவ்வழிகாட்டி இருந்தால் போதும் என்று. அத்தனைத் தமிழர்களின் தொலைபேசி, கைபேசி இலக்கங்கள், முகவரிகள் உள்ளன.

நோர்வே 'சர்வதேச தமிழர்' ஆசிரியர் கவிஞர் என்.எஸ்.பிரபு அவர்கள் இந்நூலை கடந்த நவம்பரில் பரிசளித்தார். அவருக்கும் தமிழ் ஓலைகள் ஆசிரியர்களுக்கும் நமது உளமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

# இலங்கைத் தமிழ் அறிஞர்களும் முஸ்லீம் அறிஞர்களும்

அய்ரோப்பாவின் முதல் தமிழ்ப் பத்திரிகையாளரான தமிழினி ஆசிரியர் கவிஞர். வி. மா. குலேந்திரன் அவர்களின் 15 ஆவது நூல் இதுவாகும். இலண்டனில் குடிவரவுத்துறை வல்லுநராக பணியாற்றிவரும் இவர் தமிழ் மக்களுக்கு சமுதாயப் பணியாற்றி சேவையாளராகத் திகழ்ந்து வருகிறார்.

இலங்கை மண்ணில் தமிழ் வளர்க்க அரும்பாடுபட்ட தமிழறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்ட 30 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்று உள்ளன்.

தமிழனாக பிறந்து தமிழுக்காக பணிபுரிவது ஒரு கடமை உணர்வாகும். அதேவேளை மாற்று மதத்தினராக பிறந் தமிழ்ப்பணி செய்வது மிகவும் போற்றுதலுக்குரியது. அவ்வகையில் முஸ்லிம் மதத் தலைவர்கள் - ஆலீம்கள் - ஹாஜியார்கள் - மௌலவிகள் பணி குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திற்கே எடுத்துக்காட்டாக இலங்கையில் முதல் முஸ்லீம் தமிழ் நாளிதழ் தந்த முன்னோடி எல்.எம். உதுமான் பற்றியகட்டுரையை தமிழ்மாமனி மானா மக்கீன் அவர்கள் திறம்பட எழுதி உள்ளார்.

16 வயதில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் பணியில் சேர்ந்த ஆறுமுக நாவலர், 19 ஆம் நூற்றாண்டின் தமிழின் மறுமலர்ச்சிக்காக சி. வை. தாமோதரம்பிள்ளை, இங்கிலாந்தில் சட்ட வல்லுநராக ஆசியாக் கண்டத்திலேயே முதலாவது பட்டம்பெற்ற சேர். முத்துகுமார சுவாமி, மகாவித்துவான் பொன். அம்பிகை பாகர் போன்ற தமிழறிஞர்களின் உழைப்பும் தியாகமும் காலத்தால் அழிக்க முடியாதது.




உலகமெங்கும் ஒளிபரப்பபாகும் சன் தொலைக்காட்சித் தமிங்கிலத்தை இரசிக்கும் தமிழர்கள் தன் குழந்தைகளுக்கும் அப்படியே உச்சரிக்கபழக்கப்படுத்தி வருகிறார்கள். தமிழை, தமிழரை அழித்துவிட மாய்த்துவிட வந்தேறிகள் கூட்டம் தமிழ் நாட்டில் கொட்டம் அடிக்கிறது. இவற்றுக்கு எதிராக தமிழன் ஒற்றுமை உணர்வோடு போராட முன்வர வேண்டும்.

இதுபோன்ற வரலாற்றுப் பூர்வமான கருத்துக்களைக் கொண்ட நூல்களை தானும் படித்து தன் சந்ததிகளுக்கு வழிகாட்ட வேண்டும். தொகுப்பாசிரியர் குலேந்திரன் முயற்சி வெல்லட்டும். இரண்டாவது பாகம் விரைவில் கருக்கொள்ளட்டும்.

பக்கம் : 308 விலை ரூ. 90 இலங்கை ரூ. 300

வெளியீடு : தமிழினி, மெஜஸ்டிக் அபார்ட்மெண்ட்ஸ், பிளாட் 3, 5ஆவது தளம், 21, ஸ்டேஷன் ரோடு, வெள்ளவெத்தை, கொழும்பு -6, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த - இதழ்

தலையிலே மொட்டை!

காதிலே பூ! கையிலே திருவோடு!

மாண்புமிகு வாக்காளர்!

- ஏழைதாசன் விஜயகுமார்.

### அய்க்கூ சிறப்பிதழ்

- புத்தாண்டு, தேர்தல், அரசியல், காதல், பாடுபொருள் எதுவாகவும் இருக்கலாம்.
- ஒருவர் எத்தனைக் கவிதைகளும் அனுப்பலாம்.
- ஏழைதாசன் ஆண்டுக் கட்டணம் ரூ.60/- செலுத்தி இருத்தல் வேண்டும்.
- உங்கள் அய்க்கூக்களை. ஆசிரியரின் கைப்பேசி 94427-76868 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்பலாம்.
- குரல் வழியில் பதிவு செய்யலாம்.
- கடிதவழியில் படைப்புகளை அனுப்பி வைக்கலாம்.
- தொலை தொடர்புக்கு. 0091- 04322 - 226426 (இரவு 10.00 மணிக்கு மேல்)

**கடைசி நாள் : 31-03-2006**

முன்னதாக அனுப்புவது நலம்

### தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## 94427 - 76868
## கைபேசியில் ஏழைதாசன்

அன்பிற்கினிய வாசகப் பெருமக்கள் எளிதில் தொடர்பு கொள்வதற்காகத்தான் கைபேசி வாங்கி உள்ளோம்.

பூமி பரப்பெங்கும் வாழும் நம் வாசகர்கள் தொகை செலுத்தி நமது தொலைபேசியில் அழைக்கும்போது அச்சகப் பணி காரணமாக பதில் விடுக்க இயலாது போய் விடுகிறது.

வாசகர்களின் அழைப்புகளை மிகவும் மதிக்கும் நாம் வெரு துயரத்தில் இத்தனை நாள் காத்திருந்தோம். காலம் கனிந்தது கைபேசி கிடைத்தது.

இனி வாசகர்கள் இராப்பகல் 24 மணிநேரத்தில் எப்போது வேண்டுமானாலும் அழைப்பு விடுக்கலாம். குறுஞ்செய்தி அனுப்பலாம்.

தங்களது சிறு படைப்புகளை, எண்ணங்களை குறுஞ்செய்தியாக்கி மகிழலாம். நல்ல படைப்புகள், கருத்துக்கள் அடுத்த திங்கள் இதழில் வெளியிடப்படும்.

குறுஞ்செய்தியில் கவனிக்கப்பட வேண்டியது உங்கள் பெயர், முகவரி அவசியத் தேவையாகும். நாமக்கல் இரா. சந்திரன், பகரைன் வேலுசதானந்தம், வெள்ளக்கோவில் ஆர். ஈசுவரன், திருவொற்றியூர் இரா. ஜெயராமன் மதுரை இரா.இரவி, டென்மார்க் பொன்ன்ண்ணா போன்றோர் அழைப்புகள் விடுத்தனர். சென்னை கே.சி. சுரேஷியன், கன்னிக்கோவில் இராசா, திருச்சி சந்திரசேகரன், மதுரை இரா.இரவி வேளச்சேரி சு. கணேஷகுமார், சென்னை பா. உதயகுமார் போன்றோர் குறுஞ்செய்தி விடுத்துள்ளனர்.

### தமிழ் வளர்ச்சித் துறை சொல் வங்கி

27-1-2006 அன்று நடைபெற்ற 31 ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவான சொற்கள் வருமாறு.

| | |
|---|---|
| Remote control | - தொலைபடு கலன் |
| Sensitization | - உணர்வேற்றம் |
| Sofa | - சொகுசணை |
| Soup | - சுடுசாறு |
| Stamp pad | - மைபொதி |
| T.V. Channel | - தொலைக்காட்சி அலைவகம் |
| Teapoy | - குறுமேசை |
| Term Loan | - காலவரைக்கடன் |
| Vexation | - இடுக்கண் |
| Visiting card | - கைச்சீட்டு |
| Zero point | - அடிநிலை |
| மல்டி மீடியா மெசேஜிங் சர்வீஸ் (எம்.எம்.எஸ்) | - பல்லூடகச் சேதிப்பணி |
| ஜாக்பாட் | - அதிரடிப் பரிசில் |
| அவகாசம் | - காலவாய்ப்பு |
| Extempore speech | - வீச்சுரை |
| Villain | - கேடர் |


STATEMENT OF **EALAIDHASON** TAMIL MONTHLY

FORM IV (SEE RULE 8)

R.N.I. Regd. No. 55308/92, R.C.No. 22449/98,

Postal Regd. No. TN/PDK/03/06-08.

PLACE OF PUBLICATION : PUDUKKOTTAI

PERIDOICITY OF ITS PUBLICATION : MONTHLY

PRINTER'S NAME

PUBLISHER'S NAME

EDITOR'S NAME : S. VIJAYAKUMAR

NATIONALITY : INDIAN

ADDRESS : NO.26, ADAPPANVAYAL 8TH STREET, PUDUKKOTTAI - 622 002. TAMIL NADU, SOUTH INDIA.

*I, S. VIJAYAKUMAR, here by declare that the particulars given above are true to the best of my knowlede and belife.*

*Date : 28.02.2006*


Sd/- S. VIJAYAKUMAR

*SIGNATURE OF PUBLISHER*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகத் தமிழர்



பூத்தபுது மலராக மானம் பூத்து
பூரித்த தோள்களிலே வீரம் பூத்து
நீத்தவிழிப் புணர்வெல்லாம் நெஞ்சில் பூத்து
நீண்டதுயில் அடிமைக்கு விடியல் பூத்து
ஆத்திபனம் வேம்புமாலை அணிந்து மன்னர்
ஆண்ட அந்தத் தமிழகத்து நிலமும் பூத்து
மாத்தமிழர் புதுயுகத்துத் தமிழ ராக
மாண்பமைந்த ஆட்சியேற்பர் ஒன்றாய் சேர்ந்தே !

இலக்கியங்கள் படைத்தவர்தாம் உலகம் போற்றும்
இலக்கணங்கள் வடித்தவர்தாம் சங்கம் தன்னில்
இலக்கோடு வாழ்ந்தவர்தாம் இடையில் ஏனோ
இலக்கின்றிப் போனதாலே மொழியை நாட்டை
விலகியிங்கே வீழ்ந்துள்ளார் சொரணை யின்னும்
விலகாமல் இருப்பதாலே இழந்து விட்ட
நலங்களினைப் புதுயுகத்துத் தமிழ ரின்று
நன்றாகப் பெற்றிடுவர் ஒன்றாய் சேர்ந்தே !

கங்கையினை வென்றர்தாம் இமயம் தன்னில்
கல்லெடுத்து இலச்சணையைப் பொறித்த வர்தாம்
சிங்களத்தைக் கடாரத்தைக் கடல்க டந்து
சிரம்தாழ வைத்தவர்தாம் சிந்தை மாறித்
தங்காலின் வலிமையினை மறந்த தாலே
தறுதலையாய்ப் பிறர்காலை நக்கு கின்றார்
பொங்கியெழும் புதுயுகத்துத் தமிழ ரின்று
பொறுப்போடு தலைநிமிர்வார் ஒன்றாய் சேர்ந்தே !

தனியாக ஒருநாடு தமிழர்க் கென்றே
தரணியிலே உருவாகும்; குறளின் செங்கோல்
இனிதாக வீற்றிருந்தே ஆட்சி செய்யும்
இருக்கின்ற துறைகளெல்லாம் தமிழைப் பேசும்
பனிமுட்டம் விலகித்தமிழ்க் கலைகள் கொஞ்சும்
பண்பாட்டில் உயர்ந்தவரென் றுலகம் மெச்சும்
குனிவுநீங்கிப் புதுயுகத்துத் தமிழ ராலே
குவலயத்தில் புதுசரிதம் பிறக்கும் உண்மை !

- பாவலர் கருமலைத் தமிழாழன், ஓசூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி பூக்கள்

- நீ வராவிட்டால் என்ன?
வயல்வெளியில்
துணையாயிருக்கும் கொக்கு!
— ஆர். ஈசுவரன் வெள்ளக்கோவில், ஈரோடு.

- மனித பொம்மைகள்
பேசிப் பேசி மரித்துப் போனார்
பெரியார்!
— ஆறு. தமிழ்நிதிவேந்தன், புதுச்சேரி -9.

- காதல் வந்தது
கண்ணாடி பார்த்தேன்
அரும்பு மீசை!
— கமலி வெங்கட், வெண்ணந்தூர், நாமக்கல்.

- வானம் தொடும் முயற்சி
சாவிற்கு அஞ்சுவதில்லை
போர்க்குண ஈசல்கள்!
— சிவராச. செல்வக்குமரன்,
பூக்கொல்லை, பேராவூரணி.

- முள் மீது
சேலை
வாழா வெட்டி!
— கா. விநாயகம், நாமகிரிப்பேட்டை, நாமக்கல்.

- இரயில் கரை ஓரம்
வெயிலில் நடக்கும் ஏழைச்சிறுவன்
இரயிலில் போகும் மனசு!
— கவியோவியத்தமிழன் அய்யலூர், திண்டுக்கல்.

- இராமன் இருக்கும் இடம்
சீதைக்கு அயோத்தி
தொடரும் பிரச்சனைகள்!
— அய்யாறு. ச. புகழேந்தி, தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-5.

- குப்பை மேட்டில் அசையும்
கருப்புத் துணிமூட்டை
அழுக்குப் பிச்சைக்காரி!
— தஞ்சை. கமருதீன், தஞ்சாவூர் - 4.

- பலத்த மழை
நகர்ந்தன
குடிசைகள்!
— ஆர்.கே. காந்திதாசன், கரடிப்பட்டி, நாமக்கல்.

- அடிக்கடி வயிறு கழுவல்;
கற்பில் கல்லெறிதல்
நாக்குத் தடித்த நடிகைகள்!
— முனைவர். பொன்னியின் செல்வன்,
அம்மன்பேட்டை, தஞ்சை.

## உலகத் தமிழர் பேரமைப்பின் — சேலம் இலக்கிய மன்றம் நிகழ்த்திய இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா

சேலம், பிப்ரவரி. 12 — சேலம் தமிழ்ச்சங்க அண்ணா நூலக மேல்தளத்தில் உலகத் தமிழர் பேரமைப்பின் - சேலம் இலக்கிய மன்ற நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

சேலம் பெரியார் பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் **வ.மு. இராமசாமி** தலைமை தாங்கினார். **க. சக்கரபாணி** வரவேற்புரை ஆற்றினார். வழக்கறிஞர் **மா. கவுதமபூபாலன்** கொடியேற்றி வைததார்.

திரைப்பாவலர் **சேலம் ஆறுமுகம்** எழுதிய 'வசந்த மல்லிகை' நூலினை புதுமைப் பாவலர் **புலமைதாசன்** வெளியிட்டார். மொழிப்போர் தியாகியும் மேனாள் சட்டமன்ற உறுப்பினருமான **மு. பரமசிவம், இரா. பச்சியண்ணன்** நூலினை பெற்றுக் கொண்டார்கள்.

செல்வ மாளிகை **ச. மாணிக்கம்,** முனைவர் **கு. சங்கரன்,** பாவலர்கள் **எழுஞாயிறு, சின்னுப் பாண்டியராசு** ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முனைவர் **வல்லரசி ஜெகந்நாதன்** நூல் திறனாய்வு செய்து பேசினார். நூலாசிரியர் **சேலம் ஆறுமுகன்** ஏற்புரை நிகழ்த்தினார்.

மற்றொரு நூலான 'உண்மையைத் தேடி கடவுளிடம் நூறு கேள்விகள்' என்ற நூலை சி.டி.என். தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் **ஜி. கே. ஸ்டாலின்** வெளியிட்டார்.

நூலகப் புரவலர் **கே. கே. திருமால் ராவ்,** கவிஞர் **தாதை உபதேசி** பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு **மனம் சேர சுந்திரகாசன்,** திருக்கோயில் நிர்வாக அலுவலர் **செந்தூரன்** ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இசைப் பாவலர் **முல்லை மாணிக்கம்** நூலாய்வுரை செய்து பேசினார். நூலாசிரியர் **ச. மாதவன்** ஏற்புரை நிகழ்த்தினார்.

நிறைவாக வந்திருந்த அனைவருக்கும் **மா. வெங்கடேசன்,** ஓவியர் **மணிமாறன்** நன்றியுரை ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

வாழ்க்கை வாழ்ந்து
பார்க்க வேண்டிய
ஒன்றுதான் என்றாலும்

படிக்க வேண்டிய
படித்து
கற்றுக் கொள்ள வேண்டிய
வாழ்வியல் நூல் என்பதை
உணர்ந்திட வேண்டும்.

சவர தகட்டிற்கு
இருபக்கம் கூர்மை
என்பதுபோல்
இன்பமும் துன்பமும்
இணைந்த இருகத்திக் கொண்ட
ஒரு உறையாகும்.

சாதுர்யமாக
கயிறுமேல் நடக்கும்
கவனத்துடன் வாழ்க்கையைக்
கையாள வேண்டும்

பெருக்கெடுத்து ஓடும்
வெள்ளத்தில் நீச்சல்
தெரியாதவன் நிலைதான்
வாழ்க்கை !

*நெருப்பலைப் பாவலர்*
**இராம. இளங்கோவன்,**
*பெங்களூர், கர்நாடகம்.*


மலர் 14 - இதழ் 7

**ஏழைதாசன்**

எல்லோரும் எல்லாமும்
பெறவேண்டும்

திருவள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி

**கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| **உள்நாடு (அஞ்சல் வழி)** | | |
| ஆண்டுக் கட்டணம் | : ரூ. | 60/- |
| வாழ்நாள் கட்டணம் | : ரூ. | 600/- |
| புரவலர் நன்கொடை | : ரூ. | 1000/- |
| **வெளிநாடு (வான்வழி)** | | |
| ஆண்டுக் கட்டணம் | : US$ | 10 |
| வாழ்நாள் கட்டணம் | : US$ | 100 |
| புரவலர் நன்கொடை | : US$ | 200 |
| **விளம்பரக் கட்டணம்** | | |
| வெளிநாடு | | |
| முழுப்பக்கம் | : ரூ. | 1000/- |
| அரைப்பக்கம் | : ரூ. | 500/- |
| உள்நாடு | | |
| முழுப்பக்கம் | : ரூ. | 500/- |
| அரைப்பக்கம் | : ரூ. | 250/- |

**பெயர்** :
EALAIDHASON
**வங்கி இலக்கம்** : A/c No.
90259
**முகவரி** : INDIAN BANK,
PUDUKKOTTAI - 622 001.
TAMIL NADU, INDIA


# எழுது ஒரு நீள் கவிதை


புதிதாக இதழ் பெறுபவர்கள் அன்பு கூர்ந்து
ஆண்டுக் கட்டணம் ரூ. 60/- அனுப்பி
உதவுங்களேன்.


- உன் குறி நிமிர்த்தி
  நீயே சுவைக்கும்
  சாதனை நிகழ்த்துடா !
- உன் இனத்துடன்
  கலவி செய்து
  ஒரு குழந்தையேனும்
  பெற்றுப்போடு பார்ப்போம்.
- அரவாணியை மணந்து
  அவர்களையும் வாழ வை
  அது சாதனை.
- எழுதவும், பேசவும்
  நீ பேசப்படவும் நிறைய உண்டு
  இன்னும்.. இன்னும்.
- கம்பம் கண்டாலும்
  கல்லைக் கண்டாலும்
  தனது கால்களை உயர்த்தும்
  நாய் நீ எனில்.
  தயங்காமல் எழுது இழிவாய்
  பெண்குறியைப் பற்றி
  ஒரு நீள் கவிதை.
- தேவைப்பட்டால்
  உனக்கு முன் நான் நிற்கிறேன்
  எனது உடைகளை களைந்து.
- ஒரு முடிவுக்கு வா...!
  எடுபட்ட நாயே....!

**- ஆங்கரை. பைரவி,**
இலால்குடி, திருச்சி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வேலணையூர் **பொன்னண்ணாவின்**

# 'நெஞ்சத்து நெருப்பு' 'உளிகள்' வெளியீட்டு விழா

**காலம் : 11 -03-2006 நேரம் : 14:30 இடம் : டென்மார்க்**

*சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் - யேர்மனி அனுசரணையுடன் ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராம் நினைவரங்கில் இரண்டு கவிதை நூல்கள் வெளியிடப்பட உள்ளன.*

- தலைவர் : திருவாளர் **கி. செல்லத்துரை** அவர்கள் (ஆசிரியர், பிரபல எழுத்தாளர், நாவலாசிரியர், ஊடகவியலாளர்.)
- சிறப்பு விருந்தினர் : **என். செல்வராஜா** அவர்கள் (மூத்த நூலகவியலாளர், ஆசிரியர், நூல்தேட்டம், இலண்டன்.)
- மங்கள தீபம் ஏற்றல் : **ம. கணேசக் குருக்கள் தம்பதியினர்**
- அமைதி வணக்கம் :
- வரவேற்புரை : திருமதி. **கமலவாணி மனோகரன்** அவர்கள்
- தலைவர் உரை :
- வெளியீட்டுரை : திருவாளர் **ஏலையா முருகதாசன்** அவர்கள் (பொறுப்பாளர், சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்)
- சிறப்புரை : **சிறப்பு விருந்தினர்**
- வாழ்த்தரங்கம் :
- நூல் வெளியீடு : திருமதி. **பொன்மணி** அவர்கள



## நூல் விமர்சனம்

- திருவளர் **ஸ்ரீ கதிர்காமநாதன்** அவர்கள் (மனோதத்துவ மருத்துவ நிபுணர்.)
- திருமதி. **விக்னா பாக்கியநாதன்** பி.ஏ., அவர்கள் (சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பதில் பொறுப்பாளர், ஆசிரியர், கலைவிளக்கு, யேர்மனி.)
- திரு. **எம்.சி. லோகநாதன்** அவர்கள் (பிரபல கவிஞர், விமர்சகர்.)
- திரு. **தி. ஸ்ரீதரன்** அவர்கள் (பிரபல பட்டிமன்ற பேச்சாளர், விமர்சகர்.)
- பதிலுரை : நூலாசிரியர் வேலணையூர் **பொன்னண்ணா** அவர்கள்



## சிறப்பு நிகழ்ச்சிகள் :

- **மண்ணைத் தேடும் மனசு** (கானமும் காட்சியும்) திரு. சின்னத்தம்பி பேரின்பராசாவும் குழுவினரும்
- **அதிர வைத்த அவலம்** (காட்சியும் கானமும்) திரு. சின்னத்தம்பி பேரின்பராசாவும் குழுவினரும்
- **கவி ராசன் கதை** (சிறுவர் நாடகம்) ஜெனனி, ஜெனுசன், ஜெனி.
- நடனம் : நடன ஆசிரியை நாட்டிய கலைமணி திருமதி. **சுமித்திரா சுஜேந்திராவின்** மாணவிகள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திரு.திருமதி. **வேலணையூர் பொன்னண்ணா பொன்மணி, அறிவகம்**
**சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்**, யேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் வானொலிகள் ஒலிபரப்பு நேரமும் - அலைவரிசைகளும்

| 102 — திருச்சி விவித பாரதி<br>100.5 — கோடைப் பண்பலை | பண்பலை FM MHz | காலை 06.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை |
|---|---|---|
| 716 — சென்னை(காலை 09.30 மணி<br>873 — இலங்கை வரை) | மத்திய அலை MW KHz | 936 — திருச்சி<br>1270 — மதுரை |

| காலை | | | | | சிற்றலை அலகு | | மாலை | | இரவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அய்.பி.சி.தமிழ் | வேரித்தாசு | வத்திக்கான் | சீனா | வத்திக்கான் | SW | Metre | சிங்கப்பூர் | வேரித்தாசு | சீனா | | வத்திக்கான் | பி.பி.சி. |
| 05.30– | 06.00– | 06.30– | 07.30– | 07.50– | | | 04.00- | 07.30- | 07.30- | 08.30- | 08.20- | 09.15- |
| 06.30 | 06.25 | 06.50 | 08.30 | 08.10 | | | 10.00 | 08.00 | 08.30 | 09.30 | 08.40 | 09.45 |
| 06.17 | | | | | 1 | 49 மீட்டர் | 06.26 | | | | | 06.14 |
| | | 07.33 | | | 2 | 41 மீட்டர் | 07.16 | | | | | 07.20 |
| | | 09.86 | | | 3 | 31 மீட்டர் | | 09.52 | 09.67 | 09.49 | 09.30 | 09.54 |
| | | | | 12.06 | 4 | 25 மீட்டர் | | | 11.68 | 11.80 | 11.85 | |
| | | | 13.61 } | | { 5 | 21 மீட்டர் | | | | | 13.76 | |
| | | | 13.71 } | | { 6 | 19 மீட்டர் | | | | | | |
| | 15.52 | | 15.21 | | 7 | 16 மீட்டர் | | | | | | |
| | | | | | 8 | 13 மீட்டர் | | | | | | |
| MHz | MHz | MHz | MHzZ | MHz | | | MHz | MHz | MHz | MHz | MHz | MHz |

**உலகத் தமிழர் வானொலியின் தாளம் பண்பலை - செயற்கைக்கோள் ஒலிபரப்பு - அலைவரிசை 11013 MHz 24 மணி நேரமும்**

■ ம. கிருட்டிணமூர்த்தி, புதுக்கோட்டை-1.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து மடல்



புலம் பெயர்ந்த தமிழர் எல்லாம் புடம் போட்ட தங்கங்கள் என்பதற்கு எடுத்துக்காட்டான ஜெர்மனி சமூக ஜோதி தம்பி புவனேந்திரன் அவர்கள் மிகச் சிறந்த மனிதர். மனித நேய மாமணி என்றே சொல்ல வேண்டும். அவரது ஆன்மீகப் பணிகள் ஒருபுறம் சிறப்பாக நடந்தாலும் என்னைக் கவர்ந்தது அவரது மனித நேயப் பணி தான். இலங்கைத் தமிழர், தமிழ்நாட்டுத் தமிழர் என்ற பாகுபாடு பார்க்காமல் தமிழ்நாட்டுத் தமிழர் பலருக்கு நவீன காது கேட்கும் கருவி வழங்கி உதவி இருக்கிறார்கள். மதுரையில் திருப்பரங்குன்றம் சாலையில் உள்ள பார்வையற்றோர் பள்ளிக்கு பல நவீன காது கேட்கும் கருவிகள் வழங்கி சிறப்பித்தமைக்கு பள்ளி நிர்வாகி ஆல்வின் சத்தியநேசன் நன்றி கூறி பாராட்டி மடல் அனுப்பி இருக்கிறார்கள். மதுரை, பொறியாளர் நகர், 7வது தெருவில் உள்ள அகவிழி பார்வையற்றோர் விடுதிக்கு இரண்டு நவீன காது கேட்கும் கருவி வழங்கி இருக்கிறார்கள். அந்த விடுதியின் நிறுவனர் பார்வையற்ற எம். பழனியப்பன் நன்றி கூறி பாராட்டி உள்ளார்கள். இப்படி உலகின் பல மூலையில் உள்ள ஏழ்மையான தமிழர்களுக்கு எல்லாம் நவீன காது கேட்கும் கருவிகள் வழங்கி வரும் வள்ளல். இவரது உடலின் நிறம் மட்டுமல்ல உள்ளமும் வெள்ளை, கள்ளம் கபடமற்ற வெள்ளை. மனத்திற்குச் சொந்தக்காரர். தமிழுக்காகவும் தமிழருக்காகவும் தொடர்ந்து பல தொண்டுகளை செய்து வரும் நல்லவர். எனது கவிதை நூல்களுக்கான அட்டைப்பட ஓவியம் வெற்றி மணி ஆசிரியர் கலாநிதி கண்ணா அவர்களிடமிருந்து வாங்கி உடன் அனுப்பி வைக்கும் வல்லவர். தமிழகத்தில் நடைபெற்ற எனது நூல்களின் வெளியீட்டு விழா செய்திகளை எல்லாம் புகைப்படத்துடன் வெள்ளி மணி இதழில் பிரசுரமாகிட உதவிடும் பண்பாளர். சொல்வதை செய்பவர் ; செய்வதை சொல்பவர். சொல்லிற்கும் செயலுக்கும் வேற்றுமை இல்லாத உயர்ந்த மனிதர். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் ஒரு பெண் துணை இருக்கிறார் என்பார்கள். சமூக ஜோதி தம்பி புவனேந்திரன் வெற்றிக்கு காரணம் அவரது அருமைத் துணைவியார் திருமதி சத்யபாமா என்றால் மிகையன்று. உடல் நலம் குன்றியபோது அவருக்கு விழியின் இமையாக இருந்து காத்தவர். அளவான குடும்பம், அன்பான மனவி, நிம்மதியான வாழ்க்கை. இதன் காரணமாகவே இவரால் மனித நேயப் பணிகளை மனம் உவந்து செய்ய முடிகின்றது. தமிழ் போல தழைத்து நீடூழி வாழ வாழ்த்திட வயதில்லை; வணங்கி மகிழ்கின்றேன்.



இடம் : மதுரை

தேதி : 08-02-06

அன்புடன்,
கவிஞர் இரா. இரவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படக் கட்டுரை :



# வணங்குதலுக்கு எம்பெருமான் முருகவேல்! வங்கிக்கு இப்பெருமான் முருகவேல்!

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகில் உள்ள புகழ் பெற்ற இராகுஸ்தலம் திருநாகேஸ்வரத்தில் 1956 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் பிறந்தார். இப்பெருமகனாரை பெற்ற பெற்றோர் பழனியப்பன் - சரஸ்வதி ஆவார்கள். என்றும் நன்கு படித்து எம். காம். (முதுகலை வணிகவியல் ) பட்டம் பெற்றார். திருநாகேஸ்வரம் செங்குந்தர் திருமண சேவை மையம் மூலம் பலசேவைகள் செய்துள்ளார்.

1979 ஆம் ஆண்டு திருவாரூரில் எழுத்தராக வங்கிப் பணியைத் தொடங்கி கும்பகோணம், கல்கத்தா, சேத்துப்பட்டு, கோட்டூர்புரம் போன்ற இடங்களில் பணியாற்றி நாகை மாவட்டம், கீழ்வேளூர் இந்தியன் வங்கியின் கிளை மேலாளராக 2005 ஆம் ஆண்டு ஜுலை முதல் பொறுப்பேற்று உள்ளார்.

ஐயப்ப பக்தராக இறை உணர்வுள்ள இவரின் குழந்தைகள் பிரகதீஸ்வரன், மகேந்திரன், துர்காதேவி ஆவார்கள்.

கீழ்வேளூரில் முதன் முதலாக லோன் மேளா நடத்தி பொது மக்களின் பாராட்டைப் பெற்றவர்.

எல்லோருடனும் எளிதில் பழகும் பண்பாளர் - அன்பாளர். இவரின் இன்முகமும் இனிய பேச்சும் இந்தியன் வங்கிக்கு அதிக அளவில் வைப்புத் தொகை சேமிப்போரின் எண்ணிக்கை மேன்மேலும் பெருகி வருகிறது.

வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களின் திருப்தியே தனது திருப்தி என பம்பரமாய் பணியாற்றும் இவரின் பாங்கு பாராட்டிற்குரியது.

"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற கவியரசர் கண்ணதாசன் அவர்களின் கருத்துக்கு மேன்மையூட்டும் மேலாளர்.

இந்தியனாய் இருப்பாய் ;

இந்தியன் வங்கியில் சேமிப்பாய் என்ற இவரின் பேச்சு இந்தியன் வங்கிக்கு மேன்மேலும் மெருகூட்டும்; வளமூட்டும்; வாடிக்கையாளர்களைக் கூட்டும்.

திரு. ப. முருகவேல் எம்.காம்., கிளை மேலாளர், இந்தியன் வங்கி, 97, வடக்கு வீதி, கீழ்வேளூர் - 611 104. நாகப்பட்டினம் மாவட்டம். தொலைபேசி : 04366 - 276 600.

**கட்டுரை ஆக்கம் : தேவூர் டாக்டர் கோ. மணிவாசகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| இதழ் பெயர் | : | **ஏழைதாசன்** |
| ஆசிரியர் | : | எஸ். விஜயகுமார் பி.ஏ., |
| பருவ காலம் | : | திங்கள் இலக்கிய இதழ் |
| உட்பொருள் | : | மாதம் ஓர் அறிஞர் அறிமுகம்,<br>புலம் பெயர் தமிழர்களின் நேர்காணல்கள்<br>ஆசிரியர் தொகுதி, கவிதைகள், கட்டுரைகள்,<br>இலக்கியச் செய்திகள்,<br>நூல்நயம், போட்டி அறிவிப்புகள். |
| பயணிக்கும் தளங்கள் | : | உலகு வாழ் தமிழர்களின் இதயங்களில் எல்லாம். |
| பாராட்டியவர்கள் | : | போப் 2ஆம் ஜான்பால், இங்கிலாந்து இளவரசர் சார்லஸ்<br>ஜனாதிபதி அப்துல்கலாம்<br>கலைஞர். மு. கருணாநதிதி மற்றும் பலர். |
| விருதுகள் | : | 1997 புதுக்கோட்டையின் சிறந்த பத்திரிகையாளர் விருது<br>1998 தாஸ்னா 2வது மாநில சிற்றிதழ் விருது<br>2001 உதயதாரகையின் சிறந்த சிற்றிதழ் விருது |




**உலகத் தமிழ் மாநாடு**

1995 தஞ்சாவூர், 1996 கனடா, 1999 சென்னை
ஆகிய மாநாட்டில் ஏழைதாசன் இதழ் பங்கேற்பு.

**சந்தா விவரம்**

| உள்நாடு : | | வெளிநாடு : |
|---|---|---|
| ஆண்டுக்கு | ரூ. 60/- | 10 US டாலர் |
| வாழ்நாளுக்கு | ரூ 600/- | 100 US டாலர் |
| புரவலர் | ரூ. 1000 /- | 200 US டாலர் |

முகவரி : 26, அடப்பன்வயல் 8 ஆம் வீதி, புதுக்கோட்டை - 622 002.
தமிழ்நாடு, இந்தியா ☎ 0091- 04322 - 226426

## சிற்றிதழ்ச் சுற்றுலா

நன்றி : நம்உரத்த சிந்தனை பிப்/06



## 1700 இலவச முகாம் நடத்திய மூலிகை மருத்துவர் தேவூர் மணிவாசகத்தின் இலவச மூலிகை தைல வர்ம தடவு சிகிச்சை முகாம் விபரம் :

| மாதம் | நாள் | கிழமை | இடம் |
|---|---|---|---|
| மார்ச் | 11 | சனி | கோட்டூர் (மன்னார்குடி) |
| மார்ச் | 12 | ஞாயிறு | சூரியனார் கோயில் |
| மார்ச் | 19 | ஞாயிறு | கரியாப்பட்டினம் |
| மார்ச் | 26 | ஞாயிறு | மதுரை சிம்மக்கல்<br>(சாக்ஸ் எம்.ஏ.விஎம்எம் செட்டியார் மருத்துவமனை) |
| ஏப்ரல் | 2 | ஞாயிறு | காரைக்கால் கொல்லாபுரம் |

**தொலைபேசி : 04366 - 275 372**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தலைமுறைகள் பெயர் சொல்லும்*

# தரமான கல்வி

அழியாத
கல்வியின்
ஆலயம்

*Ph : 04322 - 236853*
*Cell : 94431 - 26025*

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா

## மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி

திருக்கோகர்ணம்,
புதுக்கோட்டை-2.

**தங்கம் மூர்த்தி, M.A., M.Ed.,**
முதல்வர் & தாளாளர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EALAIDHASON * TAMIL MONTHLY * R.N.I. Regd. No. 55308/92
R.C. No. 22449/98 * Registered No. TN/PDK/03/06-08



டென்மார்க்கில் புலம் பெயர்ந்து வாழும் கவிஞர் பொன்னண்ணா தமிழுக்கு தனது பங்களிப்பாக ஏழு நூல்கள் வெளியிட்டு உள்ளார். அவை 1. நிலமாகி, 2, வெந்தவனம், 3. பச்சை இறகு, 4. உளிகள், 5. நெஞ்சத்து நெருப்பு ஆகியன கவிதை நூல்களாகும். பக்தி இலக்கியப் பங்களிப்புகளாக 6. அபிராமி அம்பாள் பக்தி, பஜனைப் பாடல்கள், 7. விநாயகர் பக்தி பஜனைப் பாமாலை ஆகியனவாகும். 2002 ஆம் ஆண்டு இவரது தாயகமான இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டம் வேலணை கிராமத்திற்குச் சென்று வந்தார். தாய்மண்ணின் அழிவை – மக்கள் சிதறல்களை – குடியிருந்த வீட்டை – படித்தப் பள்ளியை – கும்பிட்ட கோவிலை அலைகளில் ஏற்பட்ட அழிவுகளை, சிதைவுகளைக் கண்டு சொல்லவொண்ணா மன வேதனையும் பெருங்கவலையும் கொண்டார். அவற்றை அப்படியே எழுத்து வடிவமாக 348 பக்கங்கள் கொண்ட ஒரு ஆவணத் தொகுப்பாக, வரலாற்றுப் பதிவாக ஆக்கி 'அருளமுதம்' என்னும் பெயரில் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம் தலைமையில் வெளியிட்டு உள்ளார். தற்போது தனது சுயசரிதையை எழுதி வருகிறார். 1957 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வீசிய சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி சேகரித்தார். பல மக்கள் பணி நிறுவனங்களில் தலைமைப் பதவியில் பணியாற்றி உள்ளார். 1960 இல் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம் தொடங்கி முத்தமிழ் விழாவும், 1962 இல் திருக்குறள் மாநாடும் நடத்தி இருக்கிறார். சாலை இளந்திரையன் கனகசவுந்தரி இளந்திரையன், டெல்லி பேராசிரியர் ஐயம்பெருமாள் ஆகியோரை அழைத்து பேச வைத்தார். 2005 ஆம் ஆண்டு உலகத் தமிழர் மாநாட்டில் சொற்பொழிவு ஆற்றினார். 17 வயதில் ஆரம்பித்த சமூகப் பணி, தமிழ்ப் பணி முதலியன பற்றி ஒரு நீள் பார்வையாக பதிவு செய்து வருகிறார். வருங்கால சந்ததிகளுக்கு நாம் விட்டுச் செல்வது – ஒவ்வொரு மனிதனின் வாழ்வியல் அனுபவங்களின் பதிவுகளாக இருக்கட்டும். நல்வாழ்த்துக்கள்.

பெறுநர் திரு.

Published, Printed and Owned by S. Vijayakumar
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2. Published from 26, Adappanvayal 8th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA. Editor : S. VIJAYAKUMAR, B.A.,
Telephone No. 0091 - 04322 - 226 426. Cell Phone No. : 94427 -76868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org